பக்கங்கள்:-17

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | புரட்டாதி 19 | வெள்ளிக்கிழமை | 06.10.2023 | அதிர்வு 66

## யாழ்.பல்கலை மாணவி மாயம்

### பொலிஸில் முறைப்பாடு

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீட இறுதியாண்டு மாணவியைக் காண வில்லை என மாணவியின் பெற்றோரால் யாழ். பொலிஸ் நிலையத்தில் 03▶

# ரணிலால் நாட்டுக்கு அபகீர்த்தி



## சபையில் விளாசித் தள்ளிய சாணக்கியன்

“சர்வதேச விசாரணையை நிராகரிப்பதாகக் கூறி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டுக்குப் பெருமை சேர்க்கவில்லை. நாட்டுக்கு அபகீர்த்தியையே அவர் ஏற்படுத்தியுள்ளார்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார். 03▶

### பண்ணையாளர்களின் பிரச்சினையைத் தீர்க்காமல்

# ஜனாதிபதி மட்டக்களப்பு வந்தால் அமோக வரவேற்பு வழங்கத் தயார்

### சாணக்கியன் எச்சரிக்கை

“பண்ணையாளர்களின் பிரச்சினையைத் தீர்க்காமல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மட்டக்களப்புக்கு வருவாராக இருந்தால், அங்கே அவருக்குத் தகுந்த வரவேற்பு கிடைக்கும்.”

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று 03▶



# உள்நாட்டுப் பொறிமுறையில் எவருக்கும் நம்பிக்கை இல்லை



### சர்வதேச விசாரணை விவகாரத்தில் ரணில் இரட்டை வேடம் என்கிறார் சஜித்

“தொடர்ந்தும் உள்நாட்டுப் பொறிமுறையில் யாருக்கும் நம்பிக்கை இல்லை. எமது பிரச்சினையை உள்நாட்டுப் பொறிமுறைக்குள் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே நானும் இருந்து வந்தேன். ஆனால், தற்போதுள்ள நிலையில் 03▶




தமிழ்த் தேசியம் குறித்துப் பேசும் தமிழ் கட்சி ஒன்றின் இரண்டாம் நிலை தலைவர் அவர். நேற்றுப் பகல் தொலைபேசி அழைப்பு எடுத்தார். எடுத்த எடுப்பில் சீறினார்.

“தமிழ்த் தலைவர்களைத் திருந்த விடாமல் கெடுப்பவர்கள் உங்களைப் போன்ற ஊடகவியலாளர்கள்தான்” – என்று வெளிப்படையாகக் குற்றம் சுமத்தினார்.

என்ன, ஏது என்று விசாரித்தேன். 02▶

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எல்லாம் நேற்று முன்தினம் நடந்த 'மனித சங்கிலிப் போராட்டம் உரஅ ஊர்வலம்' பற்றிய விடயம்தான்.

"மனித சங்கிலிப் போராட்டம் பெருந் தோல்வி. ஒரு போராட்டத்துக்குரிய ஏற்பாடுகளே செய்யப்படாமல் வெறும் அறிக்கைகள், அறிவிப்புகளோடு அரசியல் செய்யும் சுத்துமாத்து. வியர்வை சிந்தாமல் விளைச்சல் ஈட்டும் தந்திரம். இது சரிப்பட்டு வராது. தமிழ்த் தேசிய அரசியல் என்பது வெறும் அறிக்கைப் பம்மாத்து அல்ல என்பதைக் கட்சி தலைவர்களுக்கும் நிர்வாகிகளுக்கும் நெற்றிக்கு நேரே குத்துமாற் போல் மக்கள் கொடுத்த பதிலடி. அத்தகைய தாக்கத்தை அரசியல் தலைவர்கள் உணர்ந்தால்தான் இனியாவது திருந்தி நடப்பார்கள். அதற்கு அவர்களுக்கு அந்த உண்மை உறைப்பாக உணர்த்தப்பட வேண்டும். அதைச் செய்ய வேண்டியவர்கள் நீங்கள் தான். மனித சங்கிலிப் போராட்டம் பெரும் தோல்வி என்ற உண்மையை அப்பட்டமாகத் தலைப்பிட்டு நீங்கள் உணர்த்தி இருந்தால்தான் தலைவர்கள் திருந்த வாய்ப்புக் கிடைத்திருக்கும். ஆனால் நீங்கள் அதை மூடி மறைத்து விட்டீர்கள். மக்கள் திரண்டு வந்தார்கள் என்பது போல பக்கங்களைப் படங்களால் நிரப்பி, தலைவர்கள் 'விழுந்தும் மீசையில் மண் ஒட்டவில்லையே' என்ற பாணியில் தப்பிப் போக இடம் அளித்து விட்டீர்கள். இந்தப் பெரும் தோல்வியைத் தலைவர்கள் உணர்ந்து கொள்வதற்குப் பதிலாக அது இமாலய வெற்றி என்ற மாதிரி அவர்கள் அறிக்கை வெளியிட்டு சமாளித்துப் போக இடம் அளித்திருக்கிறீர்கள். இது வரலாற்றுத் தவறு" – என்றார்.

நான் அசடு வழியச் சமாளித்தேன். "இல்லையே... ஆசிரிய தலையங்கத்திலும் இப்பத்தியிலும் விமர்சித்து எழுதி இருந்தோமே..!" – என்று நான் சாக்குப் போக்குக் கூறினேன். அவர் விடவில்லை.

"அது மயிலிறகால் மருந்து பூசும் வேலை. கண்டிக்கும் பாணி இல்லை. மக்களைத் திரட்டி ஒரு போராட்டத்தை நடத்த வக்கில்லாத – வகையற்ற – லாயக்கற்ற – கையாலாகாத – அரசியல் தலைவர்கள் தொடர்ந்து அறிக்கைகள் மூலம் மட்டுமே போராட்டங்களை நடத்திக் கொண்டிருப்பதற்கு, உண்மைகளை மறைத்துச் சமாளித்து செய்திகளை வெளிப்படுத்தும் உங்களின் போக்குத் துணை போகின்றது. அவர்கள் நிழலோடு நடத்தும் யுத்தத்திற்கு நீங்கள் துணை போகின்றீர்கள். இது உங்கள் பேனாவுக்கு நியாயமன்று. அந்த மனித சங்கிலிப் போராட்டம் என்ற வெறும் அறிவிப்பு வெறும் ஒப்புக்குச் சப்பாணி வேலை. வீட்டில் படுத்திருந்து கொண்டு, மக்களை அறிக்கைகளில் உசுப்பேத்தி அரசியல் போராட்டங்கள், காரியங்கள் பார்க்கலாம் என்ற மட்ட ரக அரசியல்" – என்று திட்டி ஓய்ந்தார் அவர்.

தமதுகட்சியின்தலைவரையும்நிர்வாகிகளையும் கூட கொஞ்சம் செயலூக்கமாகச் செயல்பட வைக்க முடியவில்லை என்ற ஆதங்கத்தில்தான் அவர் என்னை வைகின்றார் என்பது எனக்குப் புரிந்தது. அவரது கோபத்தில் நியாயம் இருப்பதும் விளங்கியது. அதனால் செவிமடுத்து, சமாளித்துத் தொலைபேசியைத் துண்டித்தேன்.

நேற்று முன்தினம் இந்த மனித சங்கிலிப் போராட்டம் படுதோல்வி அடைந்த பின்னணியில், வலிகாமத்தில் ஒரு கட்சியின் தலைவரின் வீட்டில் மற்றைய தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள், பிரமுகர்கள் கூடி நிலைமைகளை ஆராய்ந்து, அடுத்த கட்ட நகர்வுகள் குறித்து ஆலோசனை செய்திருக்கிறார்கள்.

மனித சங்கிலிப் போராட்டத்தை தம்பாட்டில் ஊர்வலமாக மாற்றியவர்கள் யார் என்று ஒரு தரப்பு பிடுங்குப்பட்டது.

மனித சங்கிலிப் போராட்டத்தை அறிவித்துவிட்டு அதற்காக யாரும் களத்தில் இறங்கிப் பணியாற்றவில்லை, முயற்சி எடுக்கவில்லை என்பதை எல்லோரும் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் போல அங்கு வெளிப்படுத்தத் தவறவில்லை. ஆனால் இந்த பின்னடைவுடன் இவ்விடயத்தை விட்டு விட்டால் விவகாரம் பெரும் தோல்வியில் முடிந்துவிடும், ஏதாவது அடுத்துச் செய்தாக வேண்டும் என எல்லோரும் ஆதங்கப்பட்டனர். அபிப்பிராயம் கூறினர்.

கடைசியில் அடுத்த கட்டமாக வரும் கிழமை (பெரும்பாலும் திங்களன்று) ஹர்த்தால் போராட்டம் நடத்தலாம் என்று ஆலோசிக்கப்பட்டிருக்கின்றது.

"ஓ...! ஹர்த்தால் என்றால் நல்லது. அறிக்கையை வெளியிட்டு, ஊடகங்களில் வரப் பண்ணினால் போதும். நாங்கள் வீடுகளில் படுத்திருக்கலாம். ஒரு வேலையும் செய்யத் தேவையில்லை. போராட்டம் தன்பாட்டில் நடக்கும். மக்கள் கடைகள், காரியாலயங்கள், பாடசாலைகளைப் பூட்டி ஒத்துழைப்பார்கள். அவர்களைத் திரட்டிப் பிடித்து வீதிக்கு இறக்க வேண்டிய வேலையும் மிச்சம்" – என்று ஒரு தலைவர் திருப்தியுடன் கூறினார் என்றும் தகவல்.

எனக்கு என்னவோ அப்படிக் கண்ணை மூடிக்கொண்டு ஹர்த்தால் அறிவிப்பது பெரும் அநியாய, அநீதி வேலையாகத் தான் படுகின்றது. குறிப்பாகப் பாடசாலைகளை மூடுகின்றமை மகா துரோக வேலை. இன்னும் சில மாதங்களில் ஓ.எல்., ஏ.எல். பரீட்சைகள் காத்திருக்கின்றன. இன்னமும் 'சிலபஸ்' முடிக்கவில்லை என்ற பிரச்சினைகள் வேறு. தமிழர் தாயகத்தில் பாடசாலைகளை மூடுவதால் எங்கள் பிள்ளைகளின் வயிற்றில்தான் நாம் அடிக்கிறோம் என்று அர்த்தம்.

கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜெயந்த கேட்கின்றமை போல அரசியல்வாதிகள் ஹர்த்தால், வேலை நிறுத்தம் என்றெல்லாம் அறிவித்து, இன்னமுமே வாக்குரிமையைக் கூடப் பெறாத அந்தச் சிறார்களின் – அடுத்த தலைமுறையின் – வயிற்றில் ஏன் அடிக்கிறார்கள் என்பது எனக்கும் புரியவில்லை.

எனது நண்பர் ஒருவர் ஓர் அரசியல் தலைவரிடம் பாடசாலைகளை மூடாமல் ஹர்த்தால் அனுஷ்டிக்கக் கூடாதா என்று கேட்டார்.

"பாடசாலைகள் மூடப்பட்டால்தான் அது ஹர்த்தாலாகத் தெரியும்" – என்றாராம் அவர் விட்டேத்தியாக.

இந்த ஹர்த்தாலால் அரசியல் கட்சிகளைத் தவிர வேறு யாருக்குப் பயன்? சில சமயங்களில் எங்கள் போன்ற ஊடகங்களுக்கு நல்ல செய்தித் தீனி கிட்டும். அவ்வளவுதான். தமிழர் பிரதேச பொருளாதாரம்தான் பாதிக்கும். உழைப்புத்தான் வீணாகும். அன்றாடம் காய்சிகளும், கூலித் தொழிலாளர்களும், மீனவர்கள் போன்று வியர்வை சிந்தி உழைக்கும் வர்க்கத்தினருமே அல்லலுறுவார்கள். பொறுப்பில்லாமல் இப்படியே தலைவர்கள் நடப்பார்களேயானால், நேற்று முன்தினம் மனித சங்கிலிப் போராட்ட அறிவிப்பைச் செவிமடுக்காமல் உதாசீனம் செய்த மாதிரி, உத்தேச ஹர்த்தால் அறிவிப்புக்கும் மக்கள் தாங்களாகவே ஒன்று திரண்டு பதிலடி கொடுக்கமுற்பட்டாலும்ஆச்சரியப்படுவதற்கில்லை. எதற்கும் தமிழ்த் தேசியத் தலைவர்கள் சற்று சிந்தித்து முடிவெடுப்பார்களாக. மக்கள் போராட்டங்களை கொதிநிலையில் வைத்திருப்பதற்கு, முதலில் திலீபன் போன்று – தங்கள் உயிரையே ஈகம் செய்த போராளிகள் போன்று – தலைவர்கள் களத்தில் நேரடியாக இறங்க வேண்டும். அறிக்கை அரசியலையும், சுமார் ஒன்றிரண்டு மணி நேரம் வீதியில் ஆட்டம் காட்டும் ஆர்ப்பாட்டங்களையும் கைவிட்டு, மக்களுடன் கலக்க வேண்டும்.

செய்வார்கள் என்று எனக்கு நம்பிக்கை இல்லை.

+---------- +------------ +----------

நண்பர் ஸ்ரீதரன் எம்.பி. குறித்து எழுதுவேன் என்று குறிப்பிட்டிருந்தேன் அல்லவா?

நேற்று எனது நண்பர் ஒருவர் ஸ்ரீதரன் எம்.பியுடன் பேசி இருக்கிறார்.

"உங்களுக்கும் முரசு ஆசிரியருக்கும் என்ன பிணக்கு?" – என்று கேட்டிருக்கின்றார். அவர் கெக்கட்டம் விட்டுச் சிரித்தாராம்.

"இரண்டு, மூன்று நாள்களாக 'காலை முரசு', 'மாலை முரசு' பார்த்தீர்களா? என் செய்திதான். என் பேச்சு எல்லாம் உடனுக்குடன் சூடாக வருகின்றனவே. அப்படி என்றால் அது பிணக்கா? இதுதான் ஊடகவியலாளர் வித்தியாதரன். நாங்கள் பிணக்குப்படுவது அவரே கூறியமை போல இணக்கமாகப் போவதற்குத்தான். என் பேச்சு அரசியல்வாதியினுடையது. அவர் வேலை ஊடகவியலாளரின் விமர்சனம். என் வேலையை நான் பார்ப்பேன். அவர் வேலையை அவர் தம்பாட்டில் செய்வார். அதில் கருத்து வேறுபாடு, முரண்பாடு, இணக்கம் – பிணக்கம் எல்லாம் வரும், போகும். ஆனால் நட்பில் எந்த கீறலும் இல்லை" – என்று ஸ்ரீதரன் கூறினாராம்.

உண்மைதான். ஒரு சம்பவத்தை மட்டும் கூறி விடயத்தை முடிக்கலாம் என்று நினைக்கிறேன்.

கடந்த ஆண்டு ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பதவியேற்ற காலம். 2019 வரை தமிழர் தரப்பின் நண்பர் போல காட்டிக் கொண்ட ரணில், புதிதாக ஜனாதிபதியாகப் பதவியேற்றதும் தமிழருக்கு நியாயம் செய்வார் என்ற நம்பிக்கை – எதிர்பார்ப்பு – தமிழர்களிடமிருந்தது. இப்போது நடப்பவர் போல பேரினவாத முகத்திரையை ஆரம்பத்தில் அவர் காட்டவில்லை.

மாகாண நிர்வாகங்கள் தொடர்பில் சில முக்கிய பதவி நியமனங்களை ரணில் செய்வார் என்று எதிர்பார்க்கப்பட்ட காலம். அப்போது ஸ்ரீதரன் எம்.பி. வெளிநாடு சென்று விட்டு ஓரிரு தினங்களுக்கு முன்னர்தான் கொழும்பு திரும்பி இருந்தார். தன்னுடைய மற்றைய இரு தமிழரசுக் கட்சி எம்.பிக்களையும் கூட்டிக்கொண்டு ஜனாதிபதி ரணிலிடம் போயிருக்கிறார்.

என் பெயரை ஜனாதிபதி ரணிலிடம் குறிப்பிட்டு, பல தரப்பு அரசியல்வாதிகளுடனும் நெருங்கிப் பழகும் இவர் உங்களுக்கும் நெருக்கமானவர். இத்தகையவர்களின் சேவையை – பங்களிப்பை – பெற்றுக் கொள்ளுங்கள் என்று கூறி இருக்கின்றார் ஸ்ரீதரன். அவர் கூற, மற்றொரு எம்.பி அதை மொழிபெயர்த்து, ரணிலிடம் குறிப்பிட்டு இருக்கின்றார்.

"நல்ல யோசனை. நேரம் வரும்போது பரிசீலிப்போமே!" – என்று ரணில் பதிலளித்தாராம்.

அன்றிரவு தாமே இந்தத் தகவலை தொலைபேசி எடுத்து ஸ்ரீதரன் எம்.பி. எனக்குச் சொன்னார்.

"அண்ணே! உங்களுடன் ஒன்றும் பேசவில்லை. என் மனதுக்குப் பொருத்தமாகப்பட்டது. அதனால் அப்படிக் கூறினேன்.அதற்காகத்தான்அவரை(ரணிலை) சந்தித்தேன்" – என்றார் அவர். வேறு வட்டாரங்களின் மூலம் அப்படி நடந்ததை நானும் அறிந்து கொண்டேன்.

என்னைக் கேட்காமல் என் பெயரை ஒரு பதவிக்குப் பரிந்துரைக்கும் நட்பும் உரிமைப் பிடிப்பும் என் மீது ஸ்ரீதரனுக்கு உண்டு. நான் இனியும் அவரை விடப் போவதில்லை. வழமை போல அடிக்கடி விமர்சிப்பேன். ஒரு பிடி பிடிப்பேன். அவரும் தமது வாயை வைத்துக் கொண்டு சும்மா இருக்கப் போவதில்லை. என்னைச் சுரண்டுவார், சீண்டுவார், வம்புக்கு இழுப்பார். எங்கள் இழுபறி இப்படியே தொடரும். வாசகர்களுக்கு தீனி விழும். அவ்வளவுதான்...!

# ஐ.நாவின் அறிக்கையை நிராகரித்த ரணில் குறித்து ‘மொட்டு’ பெருமிதம்

## தமிழ்க் கட்சிகள் மீது பாய்ச்சல்

“போர் முடிவடைந்த பின்னர் இலங்கை தொடர்பில் போலியான அறிக்கையையே ஐ.நா. மனித உரிமைகள் சபை முன்வைக்கின்றது. எனவே, அந்த ஆணைக்குழுவின் அறிக்கையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிராகரித்தமையால் பெருமை அடைகின்றோம்.”

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் எம்.பி. தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:–

“போரை மஹிந்த ராஜபக்ச முடிவுக்குக் கொண்டு வந்த பின்னர், ஐ.நா. மனித உரிமைகள் சபை, பொய்யான காரணங்களை உள்ளடக்கிய அறிக்கையையே வெளியிட்டு வருகின்றது.




இதனை நாம் பல தடவைகள் சுட்டிக்காட்டி இருந்தோம். எதிரணியில் அப்போது இருந்த தலைவர்கள் இதனை ஏற்கவில்லை. எனினும், ஜனாதிபதி தற்போது அந்த நிலைப்பாட்டுக்கு வந்துள்ளமையை இட்டு நாம் பெருமை அடைகின்றோம்.

நாடு மீது பற்று இல்லாமல், அதிகாரத்துக்காக அலையும் தரப்புக்களே இலங்கை தொடர்பில் மேற்குலக நாடுகளுக்குப் போலியான தகவல்களை வழங்கி நாட்டை இரண்டாம் தரத்துக்குத் தள்ள முற்படுகின்றன.

புலிகள் காலத்தில், எமது நாட்டுக்கு சர்வதேச ரீதியில் களங்கம் ஏற்படுத்துவதற்காக புலிகளால் போலியான தகவல்கள் வழங்கப்பட்டன. அதன்பின்னர் வடக்கில் உள்ள சில தமிழ்க் கட்சிகள் அந்த வேலையைச் செய்து வருகின்றன. ஜே.வி.பியும் அவ்வாறு செயற்படுகின்றது.” – என்றார்.

### உள்நாட்டுப் பொறிமுறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ளங்களுக்கும் உள்நாட்டுப் பொறிமுறை குறித்து நம்பிக்கை இல்லை.”

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று விசேட கூற்றொன்றை முன்வைத்து குறிப்பிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“டி.டபிள்யூ. ஜேர்மன் அலைவரிசைக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழங்கிய நேர்காணலில் பேராயர் கர்தினாலுக்கும் இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் பேரவைக்கும் இடையே பரஸ்பர கருத்து வேறுபாடு உள்ளது என்று தெரிவித்திருக்கின்றார். ஆனால், அவ்வாறான எந்த பரஸ்பர முரண்பாடுகளும் இல்லை என ஆயர் ஹரல்ட் அந்தனி ஆண்டகை தெரிவித்துள்ளார்.

அவர்களின் ஒரே கோரிக்கையாக இருப்பது, உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையின் பரிந்துரைகளை உடனடியாக அமுல்படுத்த வேண்டும் என்பதாகும். அதனைச் செயற்படுத்த ஏன் முடியாமல் இருக்கின்றது.?

சர்வதேச விசாரணை தேவை இல்லை என ஜனாதிபதி அந்த நேர்காணலில் தெரிவித்திருந்தார். ஆனால், சர்வதேச விசாரணை ஒன்றைப் பெற்றுத்தருவதாக அவர்தான் தெரிவித்திருந்தார்.

ஜனாதிபதியாக வருவதற்கு முன்னர் இவ்வாறான சர்வதேச விசாரணை அவசியமானது எனத் தெரிவித்த அவர், ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் எப்படி அந்த நிலைப்பாட்டில் இருந்து மாற முடியும்.?

கர்தினால் மற்றும் இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் பேரவை கோரும் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துமாறு கேட்கின்றோம்.

சனல் 4 வீடியோ தொடர்பில் நாடாளுமன்றக் குழுவால் மேற்கொள்ளப்படும் விசாரணைகளில் எவருக்கும் நம்பிக்கை இல்லை.

மதத் தலைவர்களிடையே பிரிவினையை ஏற்படுத்துவது பெரும் பாவமாகும். அதனைச் செய்யக்கூடாது. எனவே, உயிர்த்த ஞாயிறு விவாதத்தில் எழுப்பப்பட்ட விடயங்கள் தொடர்பில் புதிய விசாரணை தேவை. இதற்குச் சர்வதேச தொடர்பையும் ஏற்படுத்த வேண்டும் என கேட்டுக்கொள்கின்றேன்.” – என்றார்.

### ரணிலால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற துறைமுக அதிகார சபை மற்றும் சிவில் விமான சேவைகள் தொடர்பான ஒழுங்கு விதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

“யாழ்ப்பாணம் – தமிழ்நாடு படகு சேவையை மீள ஆரம்பிப்பது தொடர்பில் அடிக்கடி கதைக்கப்படுகின்றது. ஆனால், அதற்கான தடை எங்கே இருக்கின்றது என்பது தொடர்பில் தெரியவில்லை. இலங்கையில் வாழ முடியாமையால் இந்தியாவுக்குச் சென்ற இரண்டு இலட்சம் பேர் வரையிலானோர் அகதிகளாக இருக்கின்றனர். இவர்கள் தொடர்பில் அரசு கவனம் செலுத்த வேண்டும். அவர்களுக்கு இங்கு வருவதற்கு உரிமை உள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் விமான நிலையம் உள்ளது. யாரேனும் அமைச்சர் வரும்போது மட்டும் சுற்றுப் பயண விமான சேவைகள் இடம்பெறும். மாலைதீவு போன்று உள்ளக விமான சேவைகளுக்கு அதனைப் பயன்படுத்த முடியும்.

இதேவேளை, அண்மையில் வெளிநாட்டு ஊடகமொன்றுக்கு நேர்காணல் வழங்கிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எங்களை இரண்டாம் தரப் பிரஜைகளாக நினைக்கின்றீர்களா என்று கேட்டுள்ளார். அவர்கள் அப்படி நினைப்பதில் தவறில்லை. இங்கே இவ்வாறு நடந்தால் அவர்கள் அப்படித்தான் நினைப்பார்கள். நீதிபதிகூட நாட்டை விட்டு வெளியேறிச் செல்லும்போது அப்படி கேட்கலாம்தானே. நீங்கள் இவ்வாறு செய்வதால் நடக்கும் வேலையே இது.

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவுக்கு என்ன நடந்தது என்று ஆஸாத் மௌலானா கூறுவதாக அந்த அந்த வெளிநாட்டு ஊடகம் தெரிவிக்கின்றது. ஆனால், நீங்கள் சர்வதேச விசாரணையை நிராகரிக்கின்றீர்கள். நீங்கள் அவ்வாறு கூறி நாட்டுக்குப் பெருமையைக் கொண்டு வரவில்லை. அபகீர்த்தியையே கொண்டு வந்துள்ளீர்கள்.

வெளிவிவகார அமைச்சரின் மகன் தானே அமைச்சருக்கு ஆலோசனை வழங்குகின்றார். அவர்தான் ஜனாதிபதியின் இந்த நேர்காணலுக்கு ஆலோசனை வழங்கினாரோ தெரியவில்லை. சிறுபிள்ளைத்தனமான பதிலையே ஜனாதிபதி வழங்கியுள்ளார்.” – என்றார்.

### யாழ்.பல்கலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அநுராதபுரம் பகுதியைச் சேர்ந்த மாணவியே காணாமல்போயுள்ளார்.

மாணவி யாழ். போதனா வைத்தியசாலைக்கு அருகில் உள்ள மருத்துவ பீட மாணவர் விடுதியில் தங்கியிருந்து தனது கற்றல் நடவடிக்கையை மேற்கொண்டு வந்துள்ளார்.

இந்நிலையில், கடந்த செவ்வாய்க்கிழமை முதல் அவரது தொலைபேசி இயங்காத நிலையில், அவரைத் தேடி அநுராதபுரத்தில் இருந்து யாழ்ப்பாணத்துக்குப் பெற்றோர் வந்துள்ளனர்.

விடுதியில் பெற்றோர் விசாரித்தபோது, மாணவி செவ்வாய்க்கிழமை விடுதியில் இருந்து வெளியேறிச் சென்றார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதையடுத்து பெற்றோரால் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில், பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

### ஜனாதிபதி மட்டக்களப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நடைபெற்ற துறைமுக அதிகார சபை மற்றும் சிவில் விமான சேவைகள் தொடர்பான ஒழுங்கு விதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்,

“வெள்ளி, சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் ஜனாதிபதி மட்டக்களப்பு வரவுள்ளார். இந்நிலையில் மட்டக்களப்பு, மயிலத்தமடுவில் பண்ணையாளர்கள் தொடர்ச்சியாக 22 நாட்களாகப் போராடி வருகின்றனர். தங்களுடைய மேய்ச்சல் தரை பிரதேசங்களை அபகரித்து, ஏனைய மாவட்டங்களில் இருந்து அமைச்சர்கள் சிலரின் வழிகாட்டல்களில் புதிதாக விவசாயம் செய்ய வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

வேண்டுமென்றால் அவர்கள் வேறு எங்காவது அதனைச் செய்யலாம். மயிலத்தமடு மக்களின் மேய்ச்சல் தரைகளை அவர்கள் பயன்படுத்த முடியாது. அங்கு வெளி மாவட்டங்களில் இருந்து வந்து விவசாயம் செய்தால் அங்குள்ள பண்ணையாளர்கள் தமது மாடுகளை எங்கு கொண்டு செல்வது.?

அத்துடன் பண்ணையாளர்களின் கோரிக்கையை நிவர்த்தி செய்வதாக ஜனாதிபதி வாய்மூலம் வாக்குறுதி வழங்கியுள்ள போதும், மயிலத்தமடு, மாதவனை பிரதேசத்தில் குறித்த பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் வரையில் போராட்டம் தொடரும். இல்லாவிட்டால் இதன் விளைவுகளை மட்டக்களப்பு வரும் போது ஜனாதிபதி பார்க்கக்கூடியதாக இருக்கும். ஜனாதிபதி மட்டக்களப்புக்கு வர முதல் இதனைத் தீர்க்காவிட்டால் ஜனாதிபதிக்கு வழங்க வேண்டிய கௌரவத்தை நாங்கள் வழங்குவோம்.” – என்றார்.

# மின் விசிறியில் மோதி மாணவன் பலி பாடசாலை அதிபருக்கு இடமாற்றம்!

புசல்லாவையில் உள்ள பிரபல பாடசாலையொன்றின் மாணவன் வகுப்பறையில் இருந்த மின் விசிறியில் மோதி உயிரிழந்த சம்பவத்திற்கு நீதி கோரி பெற்றோர் நேற்று எதிர்ப்பில் ஈடுபட்டனர்.

இதேவேளை, அந்தப் பாடசாலையின் அதிபர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார் என கம்பளை வலயக் கல்வி பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

புசல்லாவையில் உள்ள பாடசாலை ஒன்றில் தரம் 10-இல் கல்வி கற்றுக்கொண்டிருந்த மாணவன் நேற்று முன்தினம் பிற்பகல் 1.25 மணியளவில் கதிரை மீதேறி மேசையில் ஏறுவதற்கு முற்பட்ட வேளை அவரது தலை மின் விசிறியில் மோதியது.

இதன்போது, காயமடைந்த மாணவன் வகுக்கபிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, அங்கிருந்து கண்டி போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டபோது உயிரிழந்தார்.

புப்புரெஸ்ஸ டெல்டா தெற்கு பகுதியை சேர்ந்த 14 வயதான ராஜரத்தினம் சதுர்சன் என்ற மாணவனே இவ்வாறு உயிரிழந்தார்.

இந்த நிலையில் பெற்றோரும் பழைய மாணவர்களும் நேற்று காலை பாடசாலை முன்பாக ஒன்று கூடியிருந்தனர்.

கம்பளை வலயக் கல்விப் பணிப்பாளர் பாடசாலைக்கு சென்று நடத்திய பேச்சின் பின்னர் அதிபரை இடமாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டது.



பாடசாலையின் மாணவர்களுக்கும் நேற்று விடுமுறை வழங்கப்பட்டிருந்தது.

பாடசாலைக்கு முன்பாக ஒன்றுகூடியிருந்த பெற்றோரும் பழைய மாணவர்களும் பேரணியாக வகுக்கப்பிட்டிய பிரதேச வைத்தியசாலைக்கு சென்று வைத்தியசாலைக்கு முன்பாக எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

சிகிச்சையளிப்பதில் ஏற்பட்ட தாமதமே மாணவனின் மரணத்திற்கு காரணம் என இதன்போது அவர்கள் குற்றம் சுமத்தினர்.

உயிரிழந்த மாணவனின் சடலம் கண்டி போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது

மேலதிக விசாரணைகளை புசல்லாவை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர் என பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

# சுற்றுச்சூழல் பிரச்சினைக்குத் தீர்வு தேடும்போது செல்வந்த நாடுகளின் மோதல் பின்தள்ளப்படும்!

## ஆசிய பசுபிக் பிராந்திய அமர்வில் ஜனாதிபதி தெரிவிப்பு

காலநிலை மாற்றம் மற்றும் உயிர் பல்வகைத்தன்மை குறைவடைதல் போன்ற சுற்றுச்சூழல் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை தேடும்போது உலக அரசியலும் செல்வந்த நாடுகளின் மோதல்களும் இரண்டாம் நிலைக்குத் தள்ளப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.



உலகில் நூறு வருடங்களுக்கு முன்பு இருந்ததை விட பத்தாயிரம் மடங்கு வேகமாக உயிர் பல்வகைத்தன்மை இழக்கப்படுகிறது என்றும், காலநிலை மாற்றம் மற்றும் உயிர் பல்வகைத்தன்மை குறைவடைதல் போன்ற சுற்றுச்சூழல் பிரச்சினைகள் என்பன மனித குலம் உள்ளடங்களாக இந்த நெருக்கடியை எதிர்கொள்ளும் அனைத்து உயிரினங்களின் இருப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

கொழும்பு ஷங்ரிலா ஹோட்டலில் நேற்று நடைபெற்ற ஆசிய பசுபிக் பிராந்திய அமைச்சர்கள் மற்றும் சுற்றாடல் அதிகார சபையின் 5 ஆவது அமர்விலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

அதற்கு இணையாக இந்த மாநாட்டில் கலந்துகொண்டிருந்த, ஈரானின் துணை ஜனாதிபதியும் சுற்றுச்சூழல் திணைக்களத்தின் தலைவருமான அலி சலாஜெ மற்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு இடையிலான இருதரப்பு பேச்சும் ஷங்ரிலா ஹோட்டல் வளாகத்தில் நடைபெற்றது.

காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ள இரு நாடுகளும் முன்னெடுத்துவரும் வேலைத்திட்டங்கள் குறித்தும், அதன் போதான ஒத்துழைப்புக்கள் தொடர்பிலும் இருநாட்டுத் தலைவர்களும் கலந்தாலோசித்தனர்.

2024 பெப்ரவரி 24 தொடக்கம் மார்ச் 01 ஆம் திகதி வரை நைரோபில் நடைபெறவிருக்கும் ஆறாவது ஐ.நா சுற்றாடல் சபையின் அமர்வுக்கு இணையாக குறித்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நிகழ்வின் நிறைவில், ஆசிய பசுபிக் பிராந்திய அமைச்சர்கள் மற்றும் சுற்றாடல் அதிகார சபை உறுப்பினர்கள் ஜனாதிபதியுடன் குழு புகைப்படம் எடுக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

சுற்றாடல் அமைச்சர் நசீர் அஹமட், வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி, நீதி அமைச்சர் கலாநிதி விஜயதாஸ ராஜபக்ஷ, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, பாதுகாப்புப் படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா, சுற்றாடல் அமைச்சின் செயலாளர் வைத்தியர் அனில் ஜாசிங்க, ஐக்கிய நாடுகளின் சுற்றாடல் திட்டத்தின் பிரதி நிறைவேற்றுப் பணிப்பாளர் எலிசபெத் மருமா மிரேமா, சிறுவர் மற்றும் இளைஞர்களுக்கான பிரதான குழுவின் பிரதிநிதி அனிவ மேரி கிளார்க் மற்றும் ஆசிய பசுபிக் பிராந்தியத்தின் உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகள் மற்றும் தொழில் வல்லுநர்கள் உள்ளிட்ட பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.



# அந்நியச் செலாவணியைச் சேமிக்க நாடளாவிய ரீதியில் வேலைத்திட்டம்

## கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் தெரிவிப்பு



**தானிய இறக்குமதிக்காக அரசு செலவழிக்கும் அந்நியச் செலாவணியைச் சேமிக்கும் நோக்கத்தில், கிராமியப் பிரதேசங்களில் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ள மக்களுக்கு, தானிய வகைகளைப் பயிரிடுவதற்கு அவசியமான விதைகளை வழங்குவதுடன் அவற்றுக்கான சந்தை வாய்ப்புகளைப் பெற்றுக் கொடுக்கவும் தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் தெரிவித்தார்.**

மன்னார் மாவட்டத்தை மையமாக வைத்து வெற்றிகரமாக ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த வேலைத்திட்டத்தை, எதிர்காலத்தில் நாடு பூராகவும் பரவலாக்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான்,

“பாரிய சிக்கலில் இருந்த நாட்டைப் பொறுப்பேற்க எவரும் முன்வராத நேரத்தில் , ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அந்த சவால்மிக்க பொறுப்பை ஏற்றுக் கொண்டார். அத்துடன் கடந்த காலங்களில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்பதற்காக பல்வேறு வேலைத்திட்டங்களையும் முன்னெடுத்து வருகின்றார்.

அந்த வேலைத்திட்டங்களினால் தற்போது இந்நாடு படிப்படியாக முன்னேறி வருகின்றது. இதற்காக நாம் அனைவரும் ஜனாதிபதிக்கு நன்றி தெரிவிக்க வேண்டும். மேலும் அவர் முன்னெடுக்கும் வேலைத்திட்டங்களுக்கு எமது ஒத்துழைப்பையும் வழங்க வேண்டும்.

அந்த வகையில் எமது அமைச்சு, கிராமிய பொருளாதாரத்தை வலுவூட்டுவதற்காக பல்வேறு வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது. குறிப்பாக கிராமிய மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. முக்கியமாக விவசாயத்தை ஊக்குவிப்பதன் மூலம் நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்கு கிராமிய மக்களின் பங்களிப்பையும் பெற்றுக் கொள்ளும் நோக்கில் பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றோம்.

கிராமிய பிரதேசங்களில் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ள மக்களுக்கு அவசியமான விதைகளை வழங்க நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம். குறிப்பாக உழுந்து, பயறு ஆகிய தானிய வகைகளை பயிரிடுவதற்கு அவசியமான விதைகளை வழங்குவதுடன் அவற்றுக்கான சந்தை வாய்ப்புகளை பெற்றுக்கொடுக்கவும் தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளோம்.

இதன் மூலம் இம்முறை மன்னார் மாவட்டத்தில் சுமார் 950 மெட்ரிக் தொன் பயறு விளைச்சலைப் பெற்றுக்கொள்ள முடிந்துள்ளது. இதன் ஊடாக பயறு இறக்குமதிக்கு நாம் செலவிடும் அந்நியச் செலாவணியை சேமிக்க முடிந்துள்ளது. இவ்வேலைத்திட்டத்தை நாட்டில் பரவலாக்குவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், ஆடு வளர்ப்புக்கு அவசியமான உதவிகளையும் நாம் வழங்கியுள்ளோம். முக்கியமாக காப்புறுதி வேலைத்திட்டத்துடன் இணைந்த வகையில் ஆடுகளை வழங்கி வைப்பதனால் ஆடு வளர்ப்பின்போது ஏற்படும் பாதிப்புகளைக் குறைக்கவும் முடிந்துள்ளது.

சிறிய அளவில் கிராமிய மட்டத்தில் ஆடுகள் வளர்ப்பவர்களை சுமார் 3 அல்லது 4 ஆண்டுகளில் ஆட்டுப் பண்ணையாளர்களாக மாற்றுவதற்கு அவசியமான வேலைத்திட்டங்களை இதன் மூலம் முன்னெடுக்க முடியும்.

“ஹத பிம” அதிகார சபையின் ஊடாக பயிர்ச்செய்கைக்கு அவசியமான மரக்கன்றுகளை வழங்கி வைக்கும் வேலைத்திட்டமும்முன்னெடுக்கப்படுவதோடு,கோழி வளர்ப்புக்காக கோழிக் குஞ்சுகளையும் கிராமி மக்களுக்கு வழங்குகின்றோம்.

மேலும், இளைஞர் விவசாய கிராமங்களை உருவாக்கும் பணிகளும் எமது அமைச்சின் ஊடாக பல்வேறு பகுதிகளில் நடைபெற்றுவருகின்றன. இதற்காக ஏனைய அமைச்சுகளின் ஒத்துழைப்புகளையும் பெற்றுக்கொண்டுள்ளோம். இதன் மூலம் குறித்த கிராமத்தை பொருளாதார ரீதியில் அனைத்து துறைகளிலும் தன்னிறைவு அடைந்த கிராமமாக முன்னேறுவதற்கு அவசியமான வகையில் எமது வேலைத்திட்டங்களை முன்னெடுக்கின்றோம்.

கடந்த காலங்களில் ஏற்பட்ட குறைபாடுகளைத் தவிர்த்து கிராமிய மக்களுக்கு அவசியமான விடயங்களை அவர்களுடன் கலந்துரையாடி, அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான மிகச்சரியான தீர்மானங்களையும் திட்டங்களையும் நடைமுறைத்த தேவையான வேலைத்திட்டங்களை செயற்படுத்தி வருகின்றோம்.

அதேபோன்று பொருளாதார மத்திய நிலையங்களை உருவாக்கவும், ஏற்கனவே நிர்மாணிப் பணிகள் நிறைவடைந்து இதுவரை மக்கள் பயன்பாட்டுக்கு திறக்கப்படாமல் உள்ள பொருளாதார மத்திய நிலையங்களை மிக விரைவில் திறந்து வைப்பதற்கான நடவடிக்கைகளையும் முன்னெடுத்துள்ளோம்.

விவசாய நடிக்கைகளுக்கு நீரைப் பெற்றுக்கொள்ளும் கிராமிய பிரதேசங்களில் உள்ள குளங்கள், கால்வாய்களை புனர்நிர்மாணம் செய்வதற்கும் தேவையான நிதி ஒதுக்கீடுகளையும் ஜனாதிபதி வழங்கி வைத்துள்ளதுடன், தற்போது நாடு எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடிமிக்க சூழ்நிலையிலும் கூட ஏற்கனவே ஒதுக்கப்பட்ட நிதிகளை மீளப்பெறாமல் விவசாயிகளைப் பாதுகாத்து அவர்களின் வாழ்வாதாரத்தை வலுவூட்டுவதற்கு அவசியமான திட்டங்களை முன்னெடுக்க ஜனாதிபதி வழங்கும் ஆதரவையும் இங்கு நன்றியுடன் நினைவுகூர்கின்றேன்.

மேலும், இம்முறை “தேசிய மீலாத் விழா” நிகழ்வு மன்னார் மாவட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதற்கு இணையாக பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளதுடன், இந்த வேலைத்திட்டங்களின் பயன்கள் குறித்த ஒரு சமூகத்தினருக்கு மாத்திரமன்றி மன்னார் மாவட்டத்தில் உள்ள அனைத்து சமூகத்தினரினருக்கும் கிடைக்கக் கூடிய வகையில் செயற்படுத்தப்படவுள்ளமை இதன் சிறப்பம்சமாகும்.” – என்றார்.

## தியலபே மலைப்பகுதியில் மண்சரிவு

மாத்தறை – அக்குரஸ்ஸ, தியலபே மலைப்பகுதியில் நேற்று மீண்டும் மண்சரிவு ஏற்பட்டுள்ளது.

தியலபே மலைப்பகுதியில் வாழ்ந்த 30 குடும்பங்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன என்றும் எவ்வித உயிர் ஆபத்துகளும் ஏற்படவில்லை எனவும் மாத்தறை மாவட்ட இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இந்த மண்சரிவினால் சுமார் 15 வீடுகளுக்கு சேதம் ஏற்பட்டுள்ளது.

மண்சரிவு தொடர்பில் ஆராய்வதற்காக தேசியக் கட்டட ஆய்வு நிறுவகத்தின் குழுவொன்று அங்கு அனுப்பப்பட்டுள்ளது என மாத்தறை மாவட்ட இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடன் நிவாரணம் வழங்குமாறு பணிப்பு



கடும் மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாத்தறை மாவட்ட மக்களின் தேவைகளை கண்டறிந்து அவர்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு மாத்தறை மாவட்ட செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

அந்த மக்களுக்கு அவசியமான சமைத்த உணவு மற்றும் மருந்து போன்ற அத்தியாவசிய வசதிகளை குறைவின்றி வழங்குமாறும் அதற்காக முப்படையினரின் ஒத்துழைப்பைப் பெறுமாறும் ஜனாதிபதி மேலும் பணிப்புரை விடுத்துள்ளார்.

மேலும், எதிர்காலத்தில் வெள்ளப் பெருக்கு அதிகரிக்கும் பட்சத்தில் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான முன்னாயத்தங்களை மேற்கொள்ளுமாறும் ஜனாதிபதி சம்பந்தப்பட்ட துறையினர்களுக்கு அறிவித்துள்ளார்.

வெள்ளம், பலத்த காற்று, மண் மேடுகள் இடிந்து விழுதல், கடும் மழை, பாறைகள் சரிதல் மற்றும் மரங்கள் முறிந்து வீழ்ந்ததன் காரணமாக மாத்தறை மாவட்டத்தின் 16 பிரதேச செயலகப் பிரிவுகளில் இதுவரை 2 ஆயிரத்து 350 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 9 ஆயிரத்து 448 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.பகுதியளவில் சேதமடைந்த வீடுகளின் எண்ணிக்கை 399 ஆகவும், ஏனைய சொத்து சேதங்கள் 37 ஆகவும் பதிவாகியுள்ளன.

மாலிம்பட, அகுரெஸ்ஸ, கம்புருபிட்டிய, திஹகொட ஆகிய பிரதேசங்களில் நிறுவப்பட்டுள்ள உணவு தயார்படுத்தல் நிலையங்களில் அவர்களுக்காக சமைத்த உணவு வழங்கப்படுகிறது. 6 ஆயிரத்து 967 குடும்பங்களைச் சேர்ந்த 25 ஆயிரத்து 553 பேர் வெள்ளத்தில் சிக்கியுள்ளதோடு அவர்களுக்கு இராணுவம் சமைத்த உணவை வழங்கி வருகின்றது.

வெள்ளத்தால் கூடுதலாகப் பாதிக்கப்பட்டுள்ள மாலிம்பட பிரதேச செயலக மக்களுக்காக விசேட நிவாரணத் திட்டமொன்றுஇராணுவத்தால்முன்னெடுக்கப்படுகின்றது.

அவசரகால நிலைமைகளில் மக்களை மீட்பதற்காக மோட்டார் படகுகள் மற்றும் இராணுவ சிறப்பு வாகனங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

மாத்தறை மாவட்டத்தில் அவசர அனர்த்த நிலைமைகள் தொடர்பிலான தகவல்களை மேஜர் ஜெனரல் ஜனக ரணசிங்க (0766907042) கேர்ணல் ரொஷான் கண்ணங்கர (076690714б) ஆகியோருக்கு தெரியப்படுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அறிவுறுத்தலுக்கமைய மாத்தறை மாவட்டத்தில் அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணங்களை வழங்குவது தொடர்பிலான அவசர சந்திப்பொன்று மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகரவின் தலைமையில் மாத்தறை மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

தென் மாகாண ஆளுநர் விலி கமகே, நாடாளுமன்ற உறுப்பினர் கருணா கொடிதுவக்கு, மாவட்டச் செயலாளர் வை.விமலசிறி ஆகியோருடன் ஆளுநரின் செயலாளர், மாவட்ட மேலதிகச் செயலாளர்கள், மாத்தறை மாவட்டத்தின் பிரதேச செயலாளர்கள், பிரதேச சபைகளின் செயலாளர்கள், பொலிஸார், முப்படையினர் மற்றும் அரச நிறுவனங்களை பிரதிநித்துவப்படுத்தும் அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவசர உதவிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் தொடர்பில் இதன்போது ஆராயப்பட்டதோடு, வெள்ளநீர் வடிந்தோடிய பின்னர் பொதுமக்களின் அன்றாடச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகள் தொடர்பிலும் கலந்தாலோசிக்கப்பட்டது.

பிரதேச செயலகம் மற்றும் பிரதேச சபை ஆகியன இணைந்து அனர்த்த முகாமைத்துவம் தொடர்பிலான கலந்துரையாடல்களை நாளாந்தம் நடத்தவும், அங்கு மேற்கொள்ளப்படும் தீர்மானங்களை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ குழுவினருக்கு சூம் தொழில்நுட்பத்தின் ஊடாக நாளாந்தம் அறிவிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# தலைமன்னார் - இராமேஸ்வரம் கப்பல் சேவை; முன்னோடி நடவடிக்கைகள் விரைவில் ஆரம்பம்

## அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா நாடாளுமன்றத்தில் தெரிவிப்பு

தலைமன்னார் - இராமேஸ்வரம் கப்பல் சேவையை நடத்துவதற்கான முன்னோடி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும், தமது இந்திய விஜயத்தின்போது அந்த நாட்டு துறைமுக அதிகாரிகளுடனும் இது தொடர்பில் தாம் கலந்துரையாட நடவடிக்கை எடுப்பார் என்றும் துறைமுகங்கள், விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று ரிஷாத் பதியுதீன் எம்.பி. எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

ரிஷாத் பதியுதீன் எம்.பி தமது கேள்வியின் போது -

தலைமன்னார் - இராமேஸ்வரத்துக்கு இடையிலான கப்பல் சேவைகளை ஆரம்பிப்பது தொடர்பில் அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டது. அண்மையில் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் நீங்கள் மன்னார் பகுதிக்கு சென்று நேரடியாக நிலைமைகளை பார்வையிட்டீர்கள்.

அந்த வகையில் அது தொடர்பில் மேற்கொண்டுள்ள இருக்கும் முன்னோடி நடவடிக்கைகள் என்ன என்று வினவினார்.

அதற்குப் பதிலளித்த அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, தற்போது தலைமன்னார் - இராமேஸ்வரம் கப்பல் சேவை தொடர்பான நடவடிக்கைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

தலைமன்னாரில் ஏற்கனவே காணப்பட்ட இறங்குதுறை உபகரணங்கள் மற்றும் பகுதிகள் அழிவடைந்துள்ளன. அவை திருத்தப்பட வேண்டும்.

தேவையான உபகரணங்கள் தற்போது அங்கு கொண்டு செல்லப்படுகின்றன. சுமார் ஆறு மாதங்களில் அந்த நடவடிக்கைகளை நிவர்த்தி செய்ய முடியும். இந்த திட்டத்திற்காக எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்தின் மூலம் 60 கோடி



ரூபாவைப் பெற்றுக் கொள்வதற்கான யோசனையை முன்வைத்துள்ளேன்.

அத்துடன் எதிர்வரும் 16ஆம் திகதி நான் இந்தியாவுக்கான விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளேன். அங்கு கப்பல் துறை அதிகார சபை உள்ளிட்ட அதிகாரிகளுடன் அது தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்துவேன். இந்தக் கப்பல் சேவையை நடத்துவதில் அங்குள்ள தரப்பினரும் தயாராக வேண்டியுள்ளது. அந்த நடவடிக்கைகள் முடிவுற்றதும் இந்தக் கப்பல் சேவையை ஆரம்பிக்க முடியும். - என்று தெரிவித்தார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## எல்லாம் பதவி ஆசையால்....!

பௌத்த - சிங்களப் பேரினவாத வாக்குகளைச் சுருட்டுவதற்காகத் தென்னிலங்கைத் தலைவர்கள் எப்படியெல்லாம் அரசியல் குத்துக்கரணம் அடிப்பார்கள் என்பதற்கு மிக நல்ல உதாரணம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கதான்.

உரிமைகளுக்கான தமிழர்களின் ஆயுதப் போராட்டம் உச்சத்தை தொட்டிருந்த காலத்தில், நாடு பிரிந்துவிடும் என்ற அச்சத்தில், உள்நாட்டுப் போருக்கு - உள்நாட்டு சர்ச்சைக்கு - சர்வதேச சமரசத்தைத். தேடி ஓடிய தென்னிலங்கை அரசுத் தலைவர் அவர்தான். அதே காரணத்துக்காக இலங்கை இனப் பிரச்சினைக்கு உள்ளக சுய நிர்ணய உரிமையுடன் கூடிய சமஷ்டித் தீர்வுக்கு சர்வதேச அரங்கில் பகிரங்கமாக இணங்கிய பிரதமரும் அவர்தான்.

அவர் பிரதமராக இருந்த நல்லாட்சி அரசுதான் பொறுப்புக் கூறல் பொறிமுறைக்காக சர்வதேச நிபுணத்துவப் பங்களிப்புடன் கூடிய கலப்புப் பொறிமுறை விசாரணைக்கு இணங்கியது.

இப்போது சர்வதேச சமரசத்தை அவர் நிராகரிக்கின்றார். சமஷ்டி அல்ல 13 ஆவது திருத்தத்தையே வெட்டிக் குறைப்பது குறித்துப் பேசுகின்றார். வெளிநாட்டு விசாரணைக்குக் கோருவது இலங்கை நாட்டு மக்களை இரண்டாம் தரப் பிரஜைகளாக மதிக்கும் நடவடிக்கை என்று சீறுகின்றார்.

பதற்றத்துடனும், சீற்றத்துடனும், பதகளிப்புடனும், எரிச்சலுடனும் ஜேர்மன் ஊடகவியலாளருக்கு அவர் வழங்கிய செவ்வி அவரது பேரினவாத அரசியல் குத்துக்கரணங்களைத்தான் காட்டுகின்றது.

சாணக்கியன் எம்.பி. நாடாளுமன்றத்தில் குறிப்பிட்டமை போல ஐந்து தடவைகள் பிரதமராக இருந்தவர் அவர். தனக்கு மேலிருக்கும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதிகளின் அதிகார வலிமை காரணமாக அவர்களை மீறித் தம்மால் தேசிய இனப் பிரச்சினைக்கு நீதி, நியாயமான தீர்வைக் காண முடியாதிருப்பதாக அப்போதெல்லாம் கூறியவர் ரணில். இப்போது அவரின் ஏவலர்களாக - எடுபிடிகளாக - இருக்கும் மொட்டுக் கட்சியினரின் அரசை வைத்து மேய்த்துக் கொண்டு, தாம் நிறைவேற்ற அதிகாரத்தில் இருந்தபடி, என்ன செய்கிறார்? தீர்வைத் தர முயலாமல், பௌத்த - சிங்களத் தீவிரப் போக்காளராகத் தன்னைக் காட்ட அதிகம் துள்ளிக் குதிக்கின்றார்.

சர்வதேச விசாரணையைக் கோருவது இலங்கை மக்களை இரண்டாம் தரப் பிரஜைகளாகக் கருதும் நடவடிக்கை என்கிறார் அவர். உண்மைதான். ஐ.நா. மனித உரிமைகள் சபை வரை மேற்கு நாடுகளினால் இந்த வலியுறுத்தல் முன்வைக்கப்பட்டே வருகின்றது.

அதற்கு யார் காரணம்? ரணில் போன்ற பௌத்த - சிங்கள தீவிரப் போக்கு நிலையில் நாட்டை வழிநடத்தும் அரசுத் தலைவர்கள்தான் பிரதான காரணம். அவர்கள் மட்டுமே காரணம்.

இந்த நாட்டின் சிறுபான்மை மக்களை - குறிப்பாக தமிழரை - நாட்டின் இரண்டாம் தரப் பிரஜைகளாக அல்ல, அதையும் தாண்டி மூன்றாம் தரப் பிரஜைகளாக நடத்தி, அவர்களுக்கு நீதி வழங்க மறுத்து, பேரினவாதத் திமிரில் ரணில் போன்ற அரசுத் தலைவர்கள் நடக்கின்றமையால்தான் முழுநாட்டையுமே இரண்டாம் தரநாடாக கருதும் விதத்தில் சர்வதேச விசாரணையை மேற்குலகம் வலியுறுத்துகின்றது.

இது ரணிலுக்கு நன்கு தெரியும். தெரிந்தும் பேரினவாதியாக உருக்கொண்டு நிற்கின்றார் அவர் என்றால், அதற்கு ஒரே காரணம் பதவியில் தொடர வேண்டும் என்ற அவரின் அதிகார வெறிதான்...!

# கொள்கை வட்டி வீதங்கள் ஒரு வீதத்தால் குறைப்பு

இலங்கை மத்திய வங்கி கொள்கை வட்டி வீதங்களை மேலும் ஒரு வீதத்தால் குறைத்துள்ளது.

சந்தை வட்டி வீதத்தை தீர்மானிக்கும் வகையில், மத்திய வங்கியினால் கொள்கை வட்டி வீதம் தீர்மானிக்கப்படுகின்றது.

இலங்கை மத்திய வங்கி தனது நாணயக்கொள்கையை தளர்த்திய பல சந்தர்ப்பங்களில் கொள்கை வட்டி வீதங்களை குறைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில், கொள்கை வட்டி வீதங்கள் குறைக்கப்பட்டமையின் ஊடாக சந்தையில் கடன் வட்டி வீதங்கள் விரைவில் குறைவடையுமென இலங்கை மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

பணவீக்கம் குறைவடைவது பொருள்களின் விலைகள் நிலையாக காணப்படுவதையே குறிக்கும் எனவும் விலைகள் குறைவடைவதை இது வெளிப்படுத்தாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# தேநீர், கொத்து, பிரைட் ரைஸ் விலைகளை அதிகரிக்க முடிவு

சமையல் எரிவாயு மற்றும் எரிபொருள்களின் விலை அதிகரிப்புடன் தேநீர், கொத்து, பிரைட் ரைஸ் என்பனவற்றின் விலைகளையும் அதிகரிக்க அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்கமைய, தேநீரின் விலையை 10 ரூபாவினாலும், கொத்து ஒன்றை 20 ரூபாவினாலும், பிரைட் ரைஸ் விலையை 50 ரூபாவினாலும் அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என சங்கத்தின் தலைவர் ஹர்ஷன ருக்ஷான் தெரிவித்துள்ளார்.

மின் கட்டணம் மீண்டும் அதிகரிக்கப்படுமிடத்து, உணவுப்பொருள்களின் விலைகள் மீண்டும் அதிகரிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# பாறை சரிந்து விழுந்து ஒருவர் பரிதாபச் சாவு!

காலி, துவக்குகலவத்தை விகாரைக்கு அருகில் உள்ள வீடொன்றின் மீது நேற்றுக் காலை பாறை ஒன்று வீழ்ந்ததில் அங்கிருந்த ஒருவர் உயிரிழந்துள்ளார்.

விபத்தின்போது குறித்த நபர் வீட்டினுள் உறங்கிக் கொண்டிருந்தார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

78 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

# சிறையில் கைதி ஒருவர் தூக்கிட்டு உயிர்மாய்ப்பு

புத்தளம் நீதிமன்ற மூன்றாவது சிறைச்சாலைக் கூடத்தில் கைதி ஒருவர் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை 9.45 மணியளவில் இடம்பெற்றுள்ளது என்று புத்தளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த நபர் நுரைச்சோலைப் பகுதியில் மோட்டார் சைக்கிள் திருட்டில் கைதுசெய்யப்பட்டு, நீர்கொழும்பு சிறைச்சாலையில் அடைக்கப்பட்டு நேற்று நீதிமன்ற வழக்குக்குக் கொண்டுவரப்பட்டு புத்தளம் நீதிமன்ற சிறைச்சாலைக் கூடத்தில் அடைத்து வைக்கப்பட்ட பின்னர் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கப்புஹேன, கனேமுல்ல பகுதியைச் சேர்ந்த 31 வயதுடைய சமிந்த திஸாநாயக்க என்பவரே உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவ இடத்துக்குச் சென்ற புத்தளம் நீதிவான் நீதிமன்ற நீதிபதி எம்.சி.ஹதுருசிங்ஹ சடலத்தைப் பார்வையிட்டார். அதன்பின்னர் சடலத்தை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்ல உத்தரவிட்டார்.

சடலம் புத்தளம் ஆதார வைத்தியசாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் புத்தளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# இந்தியாவின் சிக்கிமில் வெள்ளம்: உயிரிழப்புகள் 14 ஆக அதிகரிப்பு!

இந்தியாவின் வடகிழக்கு மாநிலமான சிக்கிமில் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்குண்டு உயிரிழந்தோரின் எண்ணிக்கை 14 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன், 26 பேர் வரை காயமடைந்துள்ளனர். 102 பேர் வரை காணாமல் போயுள்ளனர் என இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில், அனர்த்தத்திற்கு உள்ளான பகுதிகளில் இருந்து இதுவரை இரண்டாயிரத்திற்கும் மேற்பட்டோர் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

அத்துடன் 22 ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள் வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என இந்திய அனர்த்த முகாமைத்துவ நிலையம் அறிவித்துள்ளது. வெள்ளப்பெருக்கு காரணமாக 14 பாலங்கள் உடைந்து வீழ்ந்துள்ளன என குறிப்பிடப்பட்டுள்ளது.

மூவாயிரத்திற்கும் அதிகமான சுற்றுலாப்பயணிகள் பாதிக்கப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. காணாமல் போனவர்களை தேடும் பணியில் மீட்பு படையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

# மணிப்பூரில் வீடுகளுக்கு தீ வைப்பு: மீண்டும் பதற்றம், பாதுகாப்பு அதிகரிப்பு

கடந்த மே மாதம் கலவரத்தால் பற்றி எரிந்த மணிப்பூர் மாநிலத்தில் இயல்பு திரும்பு சூழலில், நேற்று முன்தினம் இரவு இரண்டு வீடுகளுக்கு தீ வைக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் நடைபெற்றதால் மீண்டும் பதற்றம் ஏற்பட்டுள்ளது. இதனால், பாதுகாப்பு நடவடிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளது.

மணிப்பூர் தலைநகர் இம்பாலின் மேற்கு மாவட்டத்தில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. இரவு 10 மணியளவில் பாஸ்தோய் பொலிஸ் நிலையத்துக்கு உட்பட்ட நியூ கெய்தெல்மாம்பி பகுதியில் இரவு 10 மணியளவில் அடையாளம் தெரியாத மர்ம நபர்கள் இரண்டு வீடுகள் மீது துப்பாக்கியால் சுட்டுள்ளனர். இதில், அந்த வீடு தீப்பிடித்து எரிந்துள்ளது. தீயணைப்பு வீரர்கள், பாதுகாப்புப் படையினர் இணைந்து தீயை கட்டுக்குள் கொண்டுவந்தனர்.

சம்பவ இடத்தைச் சுற்றி மைதேயி இனப் பெண்கள் திரண்டனர். ஆனால், பாதுகாப்புப் படையினர் அவர்களைத் தடுத்து நிறுத்தினர். இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் வழக்குப் பதிந்து விசாரித்து வருகின்றனர்.



மணிப்பூரில் முதல்வர் பைரன் சிங் தலைமையில் பா.ஜ.க. ஆட்சி நடைபெறுகிறது. அந்த மாநிலத்தின் மக்கள் தொகையில் சுமார் 53 சதவீதம் பேர் மைதேயி சமூகத்தையும் மீதமுள்ளவர்கள் குகி, நாகா உள்ளிட்ட சமூகத்தையும் சேர்ந்தவர்கள் ஆவர்.

மணிப்பூரில் இதுவரை பதவி வகித்த 12 முதல்வர்களில் 10 பேர் மைதேயி சமூகத்தை சேர்ந்தவர்கள். தற்போதைய முதல்வர் பிரேன் சிங்கும் இந்த சமூகத்தை சேர்ந்தவர் ஆவார்.


மணிப்பூரில் ஆட்சி, அதிகாரத்தில் மைதேயி சமூகத்தினர் ஆதிக்கம் செலுத்தி வரும் நிலையில் வனப்பகுதி மீட்புப் பணி என்ற பெயரில் குகி, நாகா சமூகத்தினரின் வாழ்விடங்கள், மத வழிபாட்டுத் தலங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன என குற்றம் சாட்டப்படுகிறது.

இந்தச் சூழலில் குகி, நாகா சமூகத்தினரை போன்று தங்களுக்கும் பழங்குடி அந்தஸ்து வழங்க வேண்டும் என்று மைதேயி சமூகத்தினர் பல்வேறு போராட்டங்களை நடத்தினர்.

இந்த விவகாரம் தொடர்பான வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம், மைதேயி சமூகத்தினருக்கு பழங்குடியினர் அந்தஸ்து வழங்க மாநில அரசுக்கு பரிந்துரை செய்தது. இதனால் தங்களது உரிமைகள் முழுமையாகப் பறிக்கப்படும் என்று குகி, நாகா சமூகத்தினர் கடந்த மே 3 ஆம் திகதி போராட்டத்தை தொடங்கினர்.

மணிப்பூரில் மைதேயி சமூகத்தினருக்கும் குகி சமூகத்தினருக்கும் இடையே கடந்த மே 3 ஆம் திகதி மோதல் ஏற்பட்டது. சுமார் 2 மாதங்களுக்கும் மேலாக நீடிக்கும் கலவரத்தில் இதுவரை 142 பேர் உயிரிழந்துள்ளனர்.

# நோர்வே எழுத்தாளர் ஜோன் போஸ்ஸேக்கு இலக்கியத்திற்கான நோபல் பரிசு அறிவிப்பு




2023 ஆம் ஆண்டிற்கான இலக்கியத்திற்கான நோபல் பரிசுக்கு நோர்வே நாட்டைச் சேர்ந்த எழுத்தாளர் ஜோன் போஸ்ஸே தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

போஸ்ஸேயின் சொல்ல முடியாத வற்றுக்காக குரல் கொடுக்கும் அவரது புதுமையான நாடகங்கள் மற்றும் உரைநடைகளுக்காக இந்த பரிசு வழங்கப்படுகிறது என தி ராயல் ஸ்வீடிஷ் அகாடமி தெரிவித்துள்ளது.

இலக்கியத்துக்காக நோபல் பரிசு பெறும் ஜோன் போஸ்ஸின் சிறந்தப் படைப்பு 'செப்டோலோஜி'. இதனை 2021 ஆம் ஆண்டு அவர் எழுதி முடித்தார். மற்றவை 'தி அதர் நேம் 2020', 'ஐ இஸ் அனதர் 2020' மற்றும் 'ஏ நியூ நேம், 2021' போன்றவை.

நோர்வேயின் வெஸ்ட் கோஸ்டில் கடந்த 1959 ஆம் ஆண்டு ஜோன் போஸ்ஸே பிறந்தார். நார்வேஜியன் நிநோர்ஸ்க் மொழியில் எழுதப்பட்ட இவரது மகத்தான படைப்புலகம் நாடகங்கள், நாவல்கள், கவிதைத் தொகுப்புகள், கட்டுரைகள், சிறார் இலக்கியம், மொழிபெயர்ப்புகள் என பல வகைமையைக் கொண்டவை.

கடந்த ஆண்டு இலக்கியத்துக்கான நோபல் பரிசு பிரபல பிரெஞ்சு எழுத்தாளர் ஆனி எர்னாக்ஸ்க்கு வழங்கப்பட்டது.தனிப்பட்ட அனுபவத்தில் இருந்து உண்மையை உடைத்து எழுதக்கூடிய எழுத்தாளராக ஆனி எர்னாக்ஸ் அறியப்படுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# உக்ரைனில் ரஷ்யா நடத்திய தாக்குதலில் சிறுவன் உட்பட 50 பேர் உயிரிழப்பு!

வடகிழக்கு உக்ரைனில் ரஷ்யா நடத்திய தாக்குதலில் 50 பேர் கொல்லப் பட்டுள்ளனர் என உக்ரைன் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கார்கிவ் பகுதியில் உள்ள குபியன்ஸ்க் அருகே உள்ள ஹரோசா கிராமத்தில் இந்த தாக்குதல் நடந்துள்ளது.

அந்த பகுதியில் நடத்தப்பட்ட தாக்குதலில் உயிரிழந்தவர்களில் 6 வயது சிறுவன் ஒருவரும் அடங்குகிறார் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக் கின்றன.

இது ரஷ்யாவின் இனப்படுகொலை ஆக்கிரமிப்பு என உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் ஜெலென்ஸ்கி குற்றம் சுமத்தியுள்ளார்.



அத்துடன், உயிரிழந்தவர்களுக்கு அனுதாபங்களை தெரிவித்த ஜெலென்ஸ்கி, காயமடைந்தவர்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன என குறிப்பிட்டுள்ளார்.

மேலும் ரஷ்ய பயங்கரவாதம் நிறுத்தப்பட வேண்டும் எனவும் பொருளாதாரத் தடைகளைத் தவிர்க்க ரஷ்யாவுக்கு உதவுபவர்கள் குற்றவாளிகள் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# ஜப்பானில் 6.6 ரிக்டர் சக்திவாய்ந்த நிலநடுக்கம்!



ஜப்பானின் டோரிஷிமா தீவுக்கு அருகில் நேற்று சக்திவாய்ந்த நில நடுக்கம் ஏற்பட்டுள்ளது.

6.6 ரிக்டர் அளவில் ஏற்பட்டுள்ள நிலநடுக்கத்தைத் தொடர்ந்து அந்த பகுதிக்கு சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட் டுள்ளது.

ஜப்பானின் டோக்கியோவிற்கு தெற்கே 550 கிலோ மீற்றர் தொலைவில் பசுபிக் பெருங்கடலில் இந்த நிலநடுக்கம் மையம் கொண்டிருக்கிறது என வானிலை ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.

நாட்டின் கிழக்கு கடற்கரையில் உள்ள இசு தீபகற்பத்தில் உள்ள தீவுகளில் 30 சென்ரி மீற்றர் முதல் – 1 மீற்றர் உயரம் வரை சுனாமி அலை ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகளவில் உள்ளன என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டு டோங்கா-/ஹங்கா ஹாபாய் எரிமலை வெடிப்பு மற்றும் சுனாமிக்குப் பிறகு இஸ் தீவுகளுக்கு சுனாமி எச்சரிக்கை விடுக் கப்படுவது இதுவே முதல் முறையாகும்.



# முதல் ஆட்டத்தில் நடப்புச் சம்பியனுக்கு பாடம் எடுத்தது நியூஸிலாந்து

உலக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் முதல் ஆட்டத்தில் நடப்புச் சம்பியன் இங்கிலாந்துக்கு சிறப்பான சம்பவம் ஒன்றைச் செய்து நியூஸிலாந்து அபார வெற்றிபெற்றுள்ளது.

13ஆவது உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் நேற்று (5) இந்தியாவில் ஆரம்பித்தது.

இதன் முதல் ஆட்டம் இங்கிலாந்து – நியூஸிலாந்து அணிகளுக்கிடையில் நேற்று பகல் – இரவு ஆட்டமாக அஹமதாபாத்தில் நடைபெற்றது.

இந்த ஆட்டத்தில் இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

ஓரளவு சிறப்பாக ஆரம்பித்த இங்கிலாந்து அணி, 40 ஓட்டங்கள் சேர்க்கப்பட்ட நிலையில் முதல் விக்கெட்டாக ஆரம்பத்துடுப்பாட்ட வீரரான டேவிட் மலன் 14 ஓட்டங்களுடன் நடையைக் கட்டினார்.

அவருக்கு அடுத்தபடியாக மற்றொரு ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான ஜொனி பைஸ்டோ (33) ஆட்டமிழந்தார்.

பின்னர் வந்த ஹறி ப்ரொக் (25), மொய்ன் அலி (11), அணித்தலைவர் ஜோஸ் பட்லர் (43) லியம் லிவிங்டன் (20) ஆகியோர் தமது பங்குக்கு ஓரளவு ஓட்டங்களைச் சேர்த்து ஆட்டமிழந்து சென்றனர்.

ஒருமுனையில் விக்கெட்டுகள் சரிந்து கொண்டிருந்தாலும் மறுமுனையில் நின்று எதிரணிக்குத் தண்ணி காட்டிக் கொண்டிருந்தார் ஜோய் ரூட். இவர் அணி 229 ஓட்டங்களைச் சேர்த்திருந்த போது 4 பௌண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக 77 ஓட்டங்களைச் சேர்த்த நிலையில் பிலிப்ஸின் பந்துவீச்சில் “போல்ட்”டாகினார்.

அவரைத் தொடர்ந்து கிறிஸ் வோகஸ் (11), சாம் குரன் (14) ஆகியோர் வீழ்த்தப்பட்டனர்.

கடைசியில் இங்கிலாந்து அணி, 50 ஓவர்களையும் முழுமையாக எதிர்கொண்டு 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 282 ஓட்டங்களைச் சேர்த்தது.

அடில் ராஷித் (15), மார்க் வூட் (13) ஆகியோர் ஆட்டமிழக்காது களத்தில் நின்றனர்.

நியூஸிலாந்து சார்பாக பந்துவீச்சில், மாட் ஹென்றி 3 விக்கெட்டுகளைச் சாய்க்க, மிச்செல் சான்ட்னெர், கிளென் பிலிப்பிஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும், ட்ரென்ட்போல்ட், ரஷின் ரவிந்திரா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

பின்னர் 283 என்ற வெற்றியிலக்கு நோக்கிக் களமிறங்கிய நியூஸிலாந்து அணி, வெறும் 10 ஓட்டங்களைச் சேர்த்த நிலையில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான வில் யங்கை (0) பறிகொடுத்தது.

ஆரம்பம் அதிர்ச்சியாக அமைந்தாலும், மறுமுனையில் நின்ற மற்றொரு ஆரம்பத்துடுப்பாட்ட வீரரான டேவன் கொங்வேயுடன், ரஷின் ரவீந்திரா இணைந்து இங்கிலாந்துப் பந்து வீச்சுகளை துவம்சம் செய்தனர்.

சிக்ஸர்கள், பௌண்டரிகள் என இருவரும் மாறி மாறி வெளுத்துக் கட்டி சதங்களைக் கடக்க, நியூஸிலாந்து அணி, 36.2 ஓவர்களில் 283 ஓட்டங்களைச் சேர்த்ததன் மூலம் 9 விக்கெட்டுகளால் வெற்றியைப் பதிவு செய்தது.

டேவன் கொங்வே – ரஷின் ரவீந்திரா ஜோடி இரண்டாவது விக்கெட்டுக்காக 250 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது.

ஆரம்பம் முதல் இறுதிவரை களத்தில் நின்ற டேவன் கொங்வே, 121 பந்துகளை எதிர்கொண்டு 3 சிக்ஸர்கள் 19 பௌண்டரிகள் அடங்கலாக 152 ஓட்டங்களைச் சேர்த்திருந்தார்.

மறுமுனையில் அவருக்குப் பக்கபலமாக நின்று ஆடிய ரஷின் ரவீந்திரா 96 பந்துகளை எதிர்கொண்டு 5 சிக்ஸர்கள், 11 பௌண்டரிகள் அடங்கலாக 123 ஓட்டங்களைச் சேர்த்திருந்தார்.

இங்கிலாந்து அணி சார்பாக பந்து வீச்சில் சாம் குரைன் ஒரு விக்கெட்டை வீழ்த்தியிருந்தார்.

இந்த ஆட்டத்தின் நாயகனாக நியூஸிலாந்தின் ரவீந்திரா தெரிவானார்.

இந்தப் போட்டியில் வென்றதன் மூலம், இந்த உலகக் கிண்ணத் தொடரின் முதலாவது வெற்றியைப் பெற்ற அணி என்ற பெருமையை நியூஸிலாந்து பெற்றது.

அதிலும், முதல் ஆட்டத்திலேயே இரு வீரர்கள் சதங்களை அடித்து அசத்தியுள்ளனர்.

இந்தப் போட்டியில் வென்ற நியூஸிலாந்து அணி, முதல் அணியாக 2 புள்ளிகளைப் பெற்றது.

அதேவேளை, இன்று நடைபெறவுள்ள இரண்டாவது நாள் ஆட்டத்தில் நெதர்லாந்து, பாகிஸ்தான் அணிகள் மோதவுள்ளன.

இந்த ஆட்டம் பகல் – இரவு ஆட்டமாக ஹைதராபாத்தில் நடைபெறவுள்ளது.

# வெள்ளத்தால் பாதிப்புற்ற பயிர்கள் இழப்பீட்டுக்கான மதிப்பீடு ஆரம்பம்



வெள்ளத்தினால் சேதமடைந்த பயிர்ச்செய்கைகளுக்கு இழப்பீடு வழங்குவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என விவசாய மற்றும் கமநல காப்புறுதி சபை தெரிவித்துள்ளது.

இதற்கான கணக்கீடுகள் தென் மாகாணத்தில் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன என சபையின் தலைவர் மத்துமபண்டார வீரசேகர தெரிவித்துள்ளார்.

மாவட்ட அலுவலக மட்டத்தில் இதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார்.

வறட்சியினால் ஏற்பட்ட சேதங்கள் கணக்கிடப்பட்டு அதற்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தக் கணக்கீடுகள் அனைத்தும் நிறைவு செய்யப்பட்டு விரைவில் பணம் வழங்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## இரத்தக் காயங்களுடன் பெண்ணின் சடலம் மீட்பு

இரத்தக் காயங்களுடன் பெண் ஒருவரின் சடலம் நிர்வாணமான நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

ஹன்வெல்ல, வெலிகன்ன – உலிவத்த பகுதியிலுள்ள வீடொன்றிலேயே இந்தச் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதியைச் சேர்ந்த டோனா மலானி என்ற 70 வயதுடைய திருமணமாகாத பெண்ணே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பொலிஸ் அவசர இலக்கத்துக்குக் கிடைத்த தகவலையடுத்து பொலிஸ் அதிகாரிகள் குழு சென்று சடலத்தை மீட்டுள்ளனர்.

இந்த மரணம் கொலையாகவோ அல்லது சந்தேகத்துக்கிடமான மரணமாகவோ இருக்கலாம் என்பதற்கான ஆதாரங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இந்தநிலையில், இந்த மரணம் தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசேட விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளனர் என்று ஹங்வெல்ல பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.



## 9 வயதுச் சிறுமி மீது பாலியல் சேட்டை 83 வயது வயோதிபர் ஏறாவூரில் கைது



(கனகராசா சரவணன்)

மட்டு. ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள பிரதேசத்தில் 9 வயதுச் சிறுமி மீது பாலியல் சேட்டை புரிந்தவர் எனக்கூறப்படும் 83 வயதுடைய ஒருவரை நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை தாங்கள் கைது செய்துள்ளனர் எனப் பொலிசார் தெரிவித்தனர்.

அந்தப் பிரதேசத்திலுள்ள 9 வயது சிறுமி மீது 83 வயதுடைய முதியவர் பாலியல் சேட்டை புரிந்துள்ள நிலையில் பாதிக்கப்பட்ட சிறுமி தனக்கு நடந்ததை பெற்றோரிடம் தெரிவித்துளார் எனக் கூறப்படுகின்றது. அவர்கள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர்.

இதனையடுத்து அந்த முதியவரை நேற்று முன்தினம் மாலையில் அவரது வீட்டில் வைத்து கைது செய்தனர். சிறுமி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். கைது செய்யப்பட்டவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.



# நிந்தவூர் பகுதியில் திருடப்பட்ட மோட்டார் சைக்கிள்கள் மீட்பு!

## சந்தேக நபர்கள் நால்வர் கைது

**(பாறுக் ஷிஹான்)**

அண்மைக்காலமாக சூட்சுமமாக திருடப்பட்ட மோட்டார் சைக்கிள்களுடன் சந்தேக நபர்கள் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தில் நிந்தவூர் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பல பகுதிகளில் அண்மைக்காலமாக மோட்டார் சைக்கிள் திருட்டு சம்பவங்கள் அதிகரித்திருந்த நிலையில் அவை தொடர்பில் பல்வேறு முறைப்பாடுகள் பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இந்த முறைப்பாடுகளுக்கமைய நிந்தவூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஏ.எம்.நஜீம் தலைமையிலான குழுவினர் புலன் விசாரணைகளை நடத்தி சந்தேக நபர்களைக் கைது செய்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இந்த நிலையில் நிந்தவூர் பொலிஸ் விசேட புலனாய்வு பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் மோட்டார் சைக்கிள் திருட்டு சம்பவத்துடன் தொடர்பு பட்டவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் நால்வர் கைது செய்யப்பட்டனர். மட்டக்களப்பு மாவட்டம் வாழைச்சேனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட காவத்தமுனை பிறைந்துரைச்சேனை பகுதியை சேர்ந்த 4 சந்தேக நபர்களும் அவர்கள் வசம் இருந்து திருடப்பட்ட நான்கு மோட்டார் சைக்கிள்களும் புதன்கிழமை மாலை கைப்பற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 23, 25 ,26, 46 வயதுடையவர்கள். சந்தேச நபர்களில் ஒருவர் திருடப்பட்ட மோட்டார் சைக்கிளை பிரித்து உதிரிப் பாகங்களை விற்பனை செய்பவர் என்பதும் பொலிஸ் விசாரணையில் இருந்து தெரிய வந்துள்ளது.

அத்துடன் திருடப்பட்ட மோட்டார் சைக்கிள் ஒன்றிற்குப் போலி இலக்க தகடு பொருத்தப்பட்டு பாவிக்கப்பட்டுள்ளமையும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நிந்தவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மழையுடனான வானிலையால் ஐம்பதாயிரம் பேருக்கு பாதிப்பு

அத்தனகலு ஓயா, கிங், நில்வலா, களு கங்கைகளில் தொடர்ந்தும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது என நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் நாள்களில் மழையுடனான வானிலை அதிகரிக்குமானால் வெள்ள அபாயம் ஏற்படும் என திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

நிலவும் மழையுடனான வானிலையால் ஏழு மாவட்டங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள மண்சரிவு அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் அமுலில் உள்ளது.

கொழும்பு, காலி, ஹம்பாந்தோட்டை, களுத்துறை, கண்டி, இரத்தினபுரி, கேகாலை மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களின் சில பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு இரண்டாம் கட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மாத்தறை மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பாடசாலைகளுக்கும் இரண்டு நாள்கள் விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற மாத்தறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ குழு கூட்டத்தின் போது இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

பலத்த மழையால் 12 மாவட்டங்களை சேர்ந்த 47 ஆயிரத்து 963 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

மேல் மாகாணத்திலேயே அதிகளவான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனிடையே, மேல், சப்ரகமுவ, தென் மற்றும் வட மேல் மாகாணங்களிலும் கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களின் சில பகுதிகளிலும் இடைக்கிடையே மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யுமென வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

ஊவா மற்றும் கிழக்கு மாகாணங்களிலும் பொலன்னறுவை மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களிலும் மாலை அல்லது இரவு வேளைகளில் மழை அல்லது இடியுடன்கூடிய மழை பெய்யுமெனத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.






## ஆசிய விளையாட்டுப் போட்டியில்

# தங்கம் வென்ற மாணவிக்கு ஜனாதிபதி ரணில் வாழ்த்து

ஆசிய விளையாட்டுப் போட்டியில் பெண்களுக்கான 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற மாணவி தருஷி கருணாரத்னவுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மன மார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித் தார்.

ஜனாதிபதி நேற்றுக் காலை மாணவியைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு அவரது திறமைக்குப் பாராட் டுக்களைத் தெரிவித்தார்.

சர்வதேச மட்டத்தில் இலங்கைக் காக அவர் பெற்றுக்கொடுத்த தனித் துவமான வெற்றியால் நாடு மிகவும் பெருமையடைகின்றது என்று தெரி வித்த ஜனாதிபதி, அவரது எதிர்கால விளையாட்டு நடவடிக்கைகளுக்கு தனது ஆசீர்வாதத்தையும் தெரிவித் தார்.

மேலும், மாணவி தருஷி கருணா ரத்ன நாட்டுக்கு வந்ததன் பின்னர் அவ ரைச் சந்திக்க எதிர்பார்ப்பதாகவும் ஜனாதி பதி ரணில் விக்கிரமசிங்க மேலும் கூறினார்.

# தங்கம் வென்ற தருஷிக்கு அதியுயர் சபையில் வாழ்த்து

"சீனாவில் நடைபெற்றுவரும் 19 ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டி களில் 21 வருடங்களின் பின்னர் பெண்களுக்கான 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் எமது நாட்டுக்குத் தங்கப் பதக்கத்தைப் பெற்றுத் தந்த தருஷி கருணாரத்னவுக்கு இந்த அதியுயர் சபையில் வாழ்த்துக்களைத் தெரிவித் துக்கொள்கின்றேன்."

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நாடாளுமன்றத் தில் நேற்று உரையாற்றும்போது தெரி வித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

"வீராங்கனையை இந்தத் துறைக்குக் கொண்டு வந்த கண்டி வளல ரத்நாயக்க மத்திய மகா வித்தியாலயத்துக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள் கின்றேன்.





ஆசியா விளையாட்டுப் போட்டிகளில் பெண்களுக்கான ஈட்டி எறிதல் பிரிவில் வெள்ளிப் பதக்கமும், மகளிருக்கான 400 மீற்றர் அஞ்சலோட்டப் போட்டியில் வெண்கலப் பதக்கமும், ஆடவருக்கான 400 மீற்றர் அஞ்சலோட்டப் போட்டியில் வெண்கலப் பதக்கத்தையும் வென்ற அனைத்து இலங்கை வீரர்களுக்கும் நானும் 225 நாடாளுமன்ற உறுப் பினர்களுடன் இணைந்து வாழ்த்துக் களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்." – என்றார்.

அத்துடன், தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவும் பதக்கங்களை வென்ற இலங்கை வீரர்களுக்கு வாழ்த்துத் தெரிவித்தார்.

# உப ரயில் கட்டுப்பாட்டாளர்களின் பணிப்பகிஷ்கரிப்பு நேற்று முடிவு

உப ரயில் கட்டுப்பாட்டாளர்களால் ஆரம்பிக்கப்பட்ட பணிப்பகிஷ்கரிப்பு முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் உள்ளிட்ட ரயில்வே திணைக்களத்தின் அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் பணிப்பகிஷ்கரிப்பு இவ்வாறு முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

இதனையடுத்து, அனைத்து உப ரயில் கட்டுப்பாட்டாளர்களும் உடனடியாக தமக்குரிய பணியிடங்களுக்கு சமுகமளிக்க வேண்டுமென ரயில்வே பொது முகாமையாளரினால் முற்பகல் அறிவிக்கப்பட்டிருந்தது.

உரிய பணியிடங்களுக்கு சேவைக்கு சமுகமளிக்க முடியாதோர் அருகிலுள்ள ரயில் நிலையங்களுக்கு செல்ல வேண்டுமென ரயில்வே பொதுமுகாமையாளர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ரயில்வே பாதுகாப்பு அதிகாரியொருவரால் உப ரயில் கட்டுப்பாட்டாளர் ஒருவர் தாக்கப்பட்டமை காரணமாக ரயில்வே உப கட்டுப்பாட்டாளர்களால் திடீர் பணிப்பகிஷ்கரிப்பு ஆரம்பிக்கப்பட்டது.

இதன் காரணமாக நேற்று முன்தினம் பல ரயில் சேவைகள் ரத்துச் செய்யப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.





புதிய மாணவர் அனுமதி - 2023 செப்டம்பர் நுழைவு

UNDERGRADUATE DEGREE PROGRAMMES
COMPUTING | BUSINESS

SLIIT NORTHERN UNI யின் நான்கு வருட பட்டப்படிப்புகள்.
தற்போது யாழ்ப்பாணத்தில்,
கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டப்படிப்புகள்.

**BSc(Hons) in Information Technology Specialising in :**

- Information Technology
- Software Engineering
- Cyber Security
- Interactive Media
- Computer Systems & Network Engineering
- Information Systems Engineering
- Data Science

**BBA(Hons) Specialising in :**

- Business Analytics
- Marketing Management
- Accounting & Finance
- Logistics & Supply Chain Management

25% இற்கும் மேலான புலமை பரிசில்கள்

நினைவில் கொள்ள வேண்டிய திகதி
விண்ணப்ப முடிவுத்திகதி
5 OCT 2023

தகுதிகாண் பரீட்சை
7 OCT 2023
( 10:30மு.ப to 11:30மு.ப)

மொழி மூலம்
தமிழ், ஆங்கிலம், சிங்களம்

SLIIT | NORTHERN UNI
Call us now:
077 147 1471
northernuni.lk
apply@northernuni.com

# AARI WORK, SAREE BLOUSE AND SHALWAR வகுப்புகளுக்கு

## புதிய மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படும்

இலங்கையில் பிரசித்திபெற்ற
தையல் கலைஞர்
**Shamala Jayaratnam**
அவர்களால்
**October மற்றும் November**
மாதங்களில்
**Aari work**
**Saree Blouse**
**Shalwar**
வகுப்புகள் கனடாவில்
நடாத்தப்படவுள்ளன.











வகுப்பில் இணைய விரும்புபவர்கள் முன்பதிவுகளை மேற்கொள்வதற்கும் மேலதிக விபரங்களை அறிந்துகொள் வதற்கும்

**Whatsapp**
**+1 (647) 856-6080**

Chinese Cultural Centre Of Greater Toronto
(Parking Lot Entrance via Progress Ave)
5183 Sheppard Ave E, Scarborough
Ontario - M1B 5Z5

# இன்றைய ராசி பலன்கள் - 06.10.2023

## மேஷம்

உங்கள் ஆற்றலை குறைக்கும் விதத்தில் உங்கள் மனதில் அவநம்பிக்கையான உணர்வுகள் தோன்றும்.நம்பிக்கையுடனும் உற்சாகத்துடனும் செயல்பட்டால் நீங்கள் சாதகமான பலன்களைப் பெறலாம்.

இன்று பணிச்சுமை கடினமாக காணப்படும்.இது உங்களுக்கு கவலையை அளிக்கும். ஆரோக்கியக் குறைபாடு காரணமாக உங்கள் பணிகளை விரைந்து ஆற்ற இயலாது.

நீங்கள் ஆவேசமான மன நிலையில் காணப்படுவீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும் வாய்ப்பு உள்ளது. எனவே அதனை தவிர்ப்பது நல்லது.

இன்று குறைவான பண வளர்ச்சி காரணமாக குறைந்த பண வரவு காணப்படும். பணத்தை திறமையுடன் கையாள வேண்டியது அவசியம்.

உங்கள் தாயின் உடல் நலனுக்காக நீங்கள் பணத்தை செலவு செய்வீர்கள்.

## ரிஷபம்

இன்றைய நாளை உங்களுக்கு சாதகமாக ஆக்கிக் கொள்ளலாம்.உங்களின் மனநிலையின் மூலம் இது சாத்தியம். உங்கள்நோக்கம் நிறைவேறும் வகையிலான நல்ல முடிவுகளை நீங்கள் எடுப்பீர்கள்.

உங்கள் மனதில் காணப்படும் உறுதி காரணமாக உங்கள் பணியில் முன்னனியில் இருப்பீர்கள்.உங்கள் மேலதிகாரிகளின் கவனத்தை ஈர்ப்பீர்கள்.

இன்று உங்கள் துணையுடன் இனிமையாகப் பேசி இன்றைய நாளை சந்தோஷமாக கழிப்பீர்கள்.

உங்களிடம் காணப்படும் பணம் போதுமானதாக இருக்கும். பணத்தை உங்கள் சொந்த தேவைக்கு பயன்படுத்துவீர்கள் மற்றும் சேமிப்பீர்கள்.

இன்று உங்களிடம் காணப்படும் நம்பிக்கையுணர்வு காரணமாக ஆரோக்கியமாக இருபதாக உணர்வீர்கள்.

## மிதுனம்

இன்று அதிர்ஷ்டம் குறைவாக காணப்படும் நாள்.எந்த முயற்சி எடுத்தாலும் அதை குறித்த நேரத்தில் முடிப்பது சிறிது கடினமாக இருக்கும்.நீங்கள் பிறரிடம் உரையாடும் போது கவனமாக இருக்க வேண்டும்.

உங்களின்பணிச்சூழல் மகிழ்ச்சி அளிப்பதாக காணப்படாது. உங்களின் கடின உழைப்பிற்காக நல்ல பெயரை பெற முடியாத சூழல் காணப்படும்.

உங்கள் துணையால் நீங்கள் புறக்கணிக்கப் படுவது போல உணர்வீர்கள். இம்மாதிரியான உணர்வுகளை தவிர்த்து இன்றைய நாளை சந்தோஷமான நாளாக ஆக்குங்கள்.

அதிகரிக்கும் குடும்ப பொறுப்புகள் காரணமாக இன்று அதிகமாக செலவு செய்ய நேரும்.

உங்கள் தந்தையின் உடல் நலனுக்காக செலவு செய்ய நேரும். இது உங்களுக்கு கவலையை உண்டாக்கும்.

## கடகம்

இன்று சற்று அனுகூலமற்ற நாளாக இருக்கும். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க இயலாத நிலை இருக்கும். இன்று பொறுமை அவசியம். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ளுங்கள்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். பணியிடச் சூழலில் சுமுகமான நிலை இருக்காது. சக பணியாளர்களுடனான தொடர்பில் சில பிரச்சினைகள் காணப்படும்.

இன்று முழுவதும் உங்கள் துணையுடன் அமைதியாக கட்டுப்பாட்டுடன் பழகுங்கள். தேவையற்ற பேச்சுக்களை தவிர்க்கும் வகையில் நாவடக்கம் மேற்கொள்ளுங்கள்.

இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். செலவுகள் அதிகமாக இருக்கும். உங்கள் தேவைகளுக்காக கடன் வாங்குவீர்கள்.

## சிம்மம்

இன்று சிறந்த நாளாக இருக்கும். நீங்கள் இன்று விரைந்து செயலாற்றுவீர்கள். இதனால் திருப்தி ஏற்படும். இன்று பயணங்களால் ஆதாயம் ஏற்படும். இன்று வளர்ச்சி பெறுவது உறுதி.

இன்று சிறப்பாக பணியாற்றுவீர்கள். இன்று பணியில் மும்மரமாக ஈடுபடுவீர்கள். உங்கள் பணிகளை திறம்பட மேற்கொள்வீர்கள்.

உங்கள் நலன் குறித்த முக்கிய முடிவு எடுக்க உங்கள் துணை உங்களுக்கு வழி காட்டுவார். இதனால் குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.

இன்று பணவரவு அதிகமாக இருக்கும். நிதிநிலை சுதந்திரமாக இருக்கும். பணத்தை நகை மற்றும் ஆடம்பர பொருட்கள் வாங்குவதற்கு பயனுள்ள வகையில் பயன்படுத்துவீர்கள்.

இன்று உங்களிடம் ஆற்றல் மற்றும் தைரியம் நிறைந்து காணப்படும்.

## கன்னி

இன்று உங்களுக்கு முன்னேற்றம் எளிதில் கிடைக்கும்.சிறிதளவு முயற்சியாயினும் வெற்றி நிச்சயம்.உங்கள் திறமை வெளிஉலகத்தில் பளிச்செனத் தெரியும்.இன்று தன்னம்பிக்கையுடன் காணப்படுவீர்கள்.

இன்று பணிகள் மிக அதிகமாக இருப்பதைக் காண்பீர்கள்.உங்கள் திறமைகளை வெளிப்படுத்த புதிய வாய்ப்புக்களுக்கு நீங்கள் முயலலாம்.

உங்கள் துணையிடம் மனம் திறந்து பேசுவீர்கள். இது உங்கள் துணையை திருப்திபடுத்தும்.

இன்று உங்களிடம் பணம் மிகுதியாக காணப்படும். அதை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

உங்கள் மனதில் காணப்படும் தைரியம் மற்றும் திருப்தி காரணமாக உங்கள் ஆரோக்கியம் இன்று சிறப்புடன் காணப்படும்.

## துலாம்

இன்று சிறந்த வளர்ச்சி காணப்படும். உங்கள் சிறிய முயற்சியின் மூலம் பெரிய வெற்றி காண்பீர்கள்.இன்று நீங்கள் மிகுந்த நம்பிக்கையுடன் காணப்படுவீர்கள்.

உங்கள் பணி சம்பந்தப்பட்ட முக்கியமான சந்திப்பில் நீங்கள்மூழ்கியிருப்பீர்கள்.இந்த சந்திப்பில் உங்கள் உரையாடலைக் கண்டு உங்கள் சக பணியாளர்கள் ஆச்சரியமடைவார்கள்.

உங்கள் துணையுடன் நட்பான முறையில் பழகுவீர்கள். இதனால் மகிழ்ச்சி நிலவும்.

இன்று நிதிநிலைமை சாதகமாக இருக்கும். உங்கள் சேமிப்பு ஆற்றல் அதிகரிக்கும்.

இன்று சீரான ஆரோக்கியம் காணப்படும். தேக ஆரோக்கியம் சிறப்புடன் இருக்கும்.

## விருச்சிகம்

இன்று அசௌகரியங்கள் காணப்படும்.அதற்கு உங்கள் மனஅழுத்தங்கள் காரணமாக இருக்கலாம். மன அழுத்தத்தைக் குறைக்க நல்ல இசையை கேட்பது திரைப்படங்கள் பார்ப்பது போன்ற பொழுது போக்கு நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ளுங்கள்.மகிழ்ச்சி கிடைக்கும்.

உங்கள் பணிகளை சமாளிப்பது கடினமாக காண்பீர்கள்.எனவே திட்டமிட்டு பணியாற்றினால் வெற்றிக்கு வழி கிடைக்கும்.

நீங்கள் உங்கள் துணையிடம் உணச்சிவசப்படுவீர்கள். இது உறவில் அமைதியையும் நல்லினக்கதையும் பாதிக்கும்.

இன்று பணத்தை கையாள்வது கடினமாக இருக்கும். பண இழப்பிற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன.

இன்று உங்களிடம் காணப்படும் பதட்டம் காரணமாக நரம்பு சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் உருவாகலாம்.

# இன்றைய ராசி பலன்கள் - 06.10.2023




இன்று மந்தமாக காணப்படுவீர்கள். சுறுசுறுப்புடன் இருக்க வேண்டியது அவசியம்.நல்லதையே நினையுங்கள்.

உங்கள் பணிகளை திறமையாக ஆற்றுவதில் சில ஏமாற்றங்களோ அல்லது தடைகளோ காணப்படும். உங்கள் சகபணியாளர்களுடனான உங்கள் தொடர் பாடல் நற்பலன்களை அளிக்காது.

உங்கள் துணையுடன் சூடான விவாதம் நடக்க வாய்ப்புள்ளது. இதனை தவிர்த்து நட்புடன் பழகுவது நல்லது.

இன்று செலவுகள்தவிர்க்க முடியாது. எனவே செலவு களை கட்டுப்படுத்த வேண்டும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக காணப்படாது. முதுகு வலி மற்றும் இருமல் ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று துடிப்பான நாளாக இருக்கும். உங்கள் இலட்சியங்களை அடைவதற்கு உகந்த நாள்.நீங்கள் உங்களுக்கென சில செயல்களை அமைத்துக் கொண்டு அதில் வெற்றி பெறுவீர்கள்.

உங்கள் சகபணியாளர்களுடன் நல்லுறவை பராமரிப்பீர்கள்.கடினமான பணிகளைக் கூட எளிதாக செய்து முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் நட்பான முறையில் பழகுவீர் கள். இதனால் மகிழ்ச்சி நிலவும்.

இன்று பணம் மிகுதியாக காணப்படும். பணத்தை பயனுள்ள வகையில் நல்ல காரியங்களுக்கு பயன் செய்வீர்கள்.

இன்றைய நாள் உங்களுக்கு சௌகரியங்கள் வழங்கும் என்பதால் நீங்கள் இன்று நல்ல ஆரோக்கியத்தை பரா மரிப்பீர்கள்.




இன்று வெற்றிகரமான நாளாக இருக்கும்.நீங்கள்செய்யும் செயல்கள் அனைத்தும் உங்களுக்கு சாதகமாக முடியும்.நீங்கள் நம்பிக்கையுடன் காணப்படுவீர்கள்.

உங்கள் பணிக்கு அங்கீகாரம் கிடைக்கும்.உங்கள் திறமைகள் பாராட்டைப் பெறும். உங்கள் செயல்திறன் மூலம் உங்களுக்கு கூடுதல் நன்மைகள் கிடைக்கும்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான நினைவுகளை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் துணையுடன் உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

இன்று பண வரவு அதிகமாக காணப்படும். பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படும். இன்று உங்களிடம் காணப்படும் அதிகப்படியான ஆற்றல் உங்கள் ஆரோக்கியத்தை சிறப்புடன் வைத்திருக்கும்.




இன்று குறைந்த பலன்களே கிடைக் கும்.இன்று சில ஏமாற்றங்களைக் காண்பீர்கள்.எல்லாவற்றையும் நட்பு முறையோடு அணுகுங்கள்.

நீங்கள் அதிகமாக பணியாற்ற வேண்டியிருக்கும்.அது உங்களுக்கு கவலையை உண்டாக்கும்.பணியாற்றும் முறையை திட்டமிட்டுஅதற்கேற்றாற் போல செயலாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் சுமுகமான உறவு காணப்படாது. அனுசரித்து நடந்துகொள்ள வேண்டும். இனிமையான வார்த்தைகளைப் பேச வேண்டும். துணையின் விருப்படி நடந்து கொள்ள வேண்டும்.

இன்று பயணத்தின் போது பண இழப்பிற்கான வாய்ப்புகள் உள்ளது. பணத்தை கவனமுடன் கையாள வேண்டும்.

OUR HISTORICAL ACHIEVEMENTS IN JAFFNA
- FACULTY OF BIO SYSTEM TECHNOLOGY UNI. OF JAFFNA - KILINOCHCHI
- CLINICAL TRAINING AND RESEARCH CENTRE FACULTY OF MEDICINE - JAFFNA
- FACULTY OF ENGINEERING UNIVERSITY OF JAFFNA
- COURT COMPLEX AT CHAVAKACHCHERI
- FACULTY OF AGRICULTURAL UNIVERSITY OF JAFFNA
- RDD OFFICE - JAFFNA
- WATER BOARD BUILDING - JAFFNA

Blue Ocean GROUP OF COMPANIES
20+ LOCATED CITIES | 235+ CONDO PROJECTS | 3500+ CONDO UNITS
KELSEY HOMES 40 Years Housing Excellence



S.Thumilan
Group Chairman
ACA, ACMA (UK), ACCA, CGMA, MCSI (UK), CPA (AUS), FMAAT (SL), ACS



CENTRALPARK JA-ELA
CENTRAL PARK
15 ACRES LARGEST GATED HOUSING DEVELOPMENT IN JA-ELA

HEAD OFFICE
No. 9A, De Fonseka Place, Bambalapitiya, Colombo 04.
Tel : +94 112 582 582 | Hotline : +94 777 546 546

JAFFNA OFFICE
No. 21/1, Kerathivu Road, Navatkuli, Jaffna.
Mobile : +94 76 690 9949 | Mobile : +94 771 546 539

Northern PC Park
வடக்கின் கணினிப்பூங்கா



கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park